**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.50/2025 |
| Deposition of Witness for | : | PW– 1 |
| Name and Age | : | திரு. வெங்கடேசன் (வயது 64) |
| Father / Husband Name | : | செவத்தேகவுண்டர் |
| Occupation | : | வனவர் ஓய்வு |
| Village | : | அண்ணாமலைஅள்ளி |
| Taluk | : | காவேரிபட்டினம் |

**நாள்** – 30.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**PW– 1**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2017ம் ஆண்டு பணியில் இருந்தபோதும் அண்ணாமலைஅள்ளியில் தான் குடியிருந்தேன். யார் மூலம் தகவல் கிடைத்தது என்றால் நானும், வனக்காவலர்கள் ஐந்து நபர்களும் தன்னிச்சையாக தான் சென்றோம். வீட்டில் இருந்து வனச்சரக அலுவலகத்திற்கு வந்தபிறகு தான் ரோந்திற்கு சென்றோம். நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். மற்ற வன அலுவலர்கள் அவர் அவர் இருசக்கர வாகனத்தில் வந்தார்கள். அனைத்து காவலர்களும் ஒன்றாக தான் சென்றோம். ரோந்திற்கு செல்ல கிளம்பிய போது காலை சுமார் 10.00மணி இருக்கும். சம்பவ இடம் சென்றபோது காலை 11.00மணி ஆனது. ரோந்திற்கு செல்லும்போது எங்களுடன் ஆவணங்கள் எதுவும் எடுத்துச்செல்லவில்லை. சம்பவ இடம் வனத்துறைக்கு சொந்தமான இடம் ஆகும். சம்பவ இடம் அருகில் எதிரிக்கு சொந்தமான பட்டா நிலம் உள்ளது. வனத்துறைக்கு சொந்தமான நிலம் முடியும் இடத்தில் வேலிகள் எதுவும் இருக்காது. சம்பவ இடத்தில் வனத்துறைக்கு சொந்தமான இடம் முடிகின்றது என குறிப்பிட்டு காட்டு கல் நடப்பட்டுள்ளதா என்றால் எல்லைக்கல் உள்ளது. சம்பவ இடத்தில் உள்ளது தான் வனத்துறைக்கு சொந்தமான எல்லைக்கல் என கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நிலஅளவையர் மூலம் அளந்தோமா என்றால் வனத்துறைக்கு சொந்தமானது

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.30 17:21:02 +0530

என தெரியும். சம்பவ இடம் வனத்துறைக்கு சொந்தமானது என்பதற்கான ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தாக்கல் செய்யவில்லை. எதிரி வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் குழி தோண்டி மாஞ்செடிகள் நடவில்லை என்றால் சரியல்ல. எதிரி நட்ட மாஞ்செடிகளை கைப்பற்றினோமா என்றால் இல்லை. உண்மையில் மாஞ்செடிகளை நட்டிருந்தால் மாஞ்செடிகளை கைப்பற்றியிருப்போம் என்றால் சரியல்ல. சம்பவத்தின் போது பொதுமக்கள் யாரும் இல்லை வழக்கில் சாட்சியாக பொதுமக்களை விசாரிக்கவில்லை. சம்பவ இடத்திற்கும் தார்சாலைக்கும் 150 அடி தூரம் இடைவெளி இருக்கும். மேற்படி சாலையில் மக்கள் போக்குவரத்து உள்ளது. எதிரி அவருடைய சொந்த நிலத்தில் விவசாயம் செய்தார் என்றாலும், புள்ளிவிபர கணக்கிற்காக பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரியிடம் இருந்து கடப்பாரை மற்றும் மண்வெட்டி கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. விசாரணைக்காக எங்கள் அலுவலகத்திற்கு எதிரியை அழைத்து அவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியை மிரட்டி ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தை நான் தான் தயாரித்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தை வனத்துறை அலுவலகத்தில் தான் தயார் செய்தோம். எதிரிக்கு கல்வி அறிவு இல்லாததால் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளை அவருக்கு தெரியாமலேயே கையொப்பம் பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.2ஆவணம் வனத்துறை அலுவலகத்தில் தயார் செய்தேன். அ.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.30 17:21:07 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.50/2025 |
| Deposition of Witness for | : | PW– 2 |
| Name and Age | : | திரு. சின்னசாமி (வயது 56) |
| Father / Husband Name | : | நடேசன் |
| Occupation | : | வனகாப்பாளர் ஓய்வு |
| Village | : | எருமாம்பட்டி |
| Taluk | : | காவேரிபட்டினம் |

**நாள்** – 30.07.2026.

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused absent. Petition U/s. 355 of BNSS filed and allowed.**

**PW– 2**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

2017ம் ஆண்டு நான் பணியில் இருந்தபோது எருமாம்பட்டியில் குடியிருந்தேன். 09.08.2016ம் தேதி எதிரி சம்பவ இடத்தில் மாஞ்செடி வைப்பதாக வனவர் வெங்கடேசன் தகவல் சொன்னார். காலை 08.00மணியளவில் தகவல் சொன்னார். அலுவகம் வந்ததற்கு பிறகு தான் ரோந்திற்கு செல்வோம். அலுவகத்தில் இருந்து 09.00மணியளவில் கிளம்பினோம். அவர் அவர் இருசக்கர வாகனத்தில் சென்றோம். சம்பவ இடம் சென்றபோது 09.00மணி இருக்கும். சம்பவ இடத்திற்கு ஐந்து காவலர்களும் ஒன்றாக தான் சென்றோம். சம்பவ இடம் வனத்துறைக்கு சொந்தமானது. சம்பவ இடம் அருகில் எதிரிக்கு சொந்தமான பட்டாநிலம் உள்ளது. இரண்டு இடங்களையும் பிரிப்பதற்கு வேலி உள்ளது. சம்பவ நாளில் இருந்து பத்து ஆண்டுகளுக்கு முன்பு வேலி போட்டார்கள். சம்பவத்தின் போது விஏஓ மற்றும் நில அளவையர் மூலம் சம்பவ இடத்தை அளந்து பார்க்கவில்லை. எதிரி அவரது நிலத்தில் விவசாயம் செய்தார் என்றால் சரியல்ல வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் செய்தார். முதல்விசாரணையில் எதிரி மாஞ்செடிகள் வைப்பதற்காக 15 குழிகள் தோண்டினார் என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரி குழிகள் தோண்டவில்லை என்றாலும், மாஞ்செடிகள் வைக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பவம் நடைபெறவில்லை

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.30 17:21:14 +0530

என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் பொதுமக்கள் யாரும் இல்லை. சம்பவ இடத்தில் பொதுமனிதர்களை விசாரிக்கவில்லை என்றால் விசாரிக்கவில்லை. சம்பவ இடத்தில் இருந்து 100 அடி தூரத்தில் போக்குவரத்து உள்ளது என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடைபெற்றிருந்தால் பொதுமக்களை சாட்சியாக விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. வழக்கில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள் அனைவரும் வனத்துறையினர் என்றால் சரிதான். எதிரி அவருடைய விவசாய நிலத்தில் விவசாயம் செய்தார் என்றால் புள்ளிவிபரகணக்கிற்காக எதிரி மீது தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களை கைப்பற்றியதாக வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி விசாரணைக்காக காவல்நிலையம் அழைதது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியிடம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரியை மிரட்டி தான் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் எதிரிக்கு தெரியாது என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்கமூலத்தை நான் சம்பவ இடத்தில் தயார் செய்தேன். ஒப்புதல் வாக்குமூலம் கையில் எழுதப்பட்டது ஆகும். H நமூனா எங்கு தயாரிக்கப்பட்டது என்றால் சம்பவ இடத்தில் தயார் செய்தோம். ரோந்திற்கு செல்லும் போது ரிப்போட் புத்தகம், வெள்ளை தாள் வைத்திருப்போம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.4ஆவணம் ரிப்போர்ட் புக் ஆகும். அ.சா.ஆ.4ஆவணத்தில் உள்ள சங்கதிகள் நான் தான் எழுதினேன். 09.08.2017ம் தேதி எழுதினேன். வழக்கு பதிவு செய்யப்பட்ட பதிவு எண் நினைவில்லை. மேற்படி ஆவணத்தில் சம்பவ இடத்தில் சீல் வைத்து கையொப்பம் செய்தேன். நான் வனக்காவலராக பணி செய்தேன். மேற்படி ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் சீல் வைக்கமாட்டோம் அலுவலகத்திற்கு சென்று தான் வைப்போம். அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்கள் வழக்கிற்காக பொய்யாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. அவர் மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வனத்துறைக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.07.30 17:21:19 +0530

Judicial Magistrate,
Palacode.